தஞ்சை மாவட்டத்தில் அரிசி வழங்கல்.

*284 வினு—திரு. இரெ. இராசமாணிக்கம்: திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் அரிசி கிடைக்காமல் ஏழைகள் கஷ்டப்படுவதும், சில பகுதிகளில் குறிப்பாக குத்தாலம் தொகுதியில் அரிசி கிலோ ரூ. 2·20 முதல் ரூ. 2·40 வரை விற்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நியாய விலையில் அரிசி கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டத்தில் செப்டம்பர் திங்களில் எல்லாப் பகுதிகளிலும் வெளிச்சந்தையில் அரிசி மிகத் தாராளமாக கிடைத்தது. தஞ்சை மாவட்டத்தில் நடுத்தர புழுங்கல் அரிசியின் விலை பொதுவாக கிலோ ரூ. 1·90 முதல் ரூ. 1·95 வரை இருந்தது. மாவட்டத்தில் 13 தாலுக்காகளில் 11 தாலுக்காகளில் இந்த விலைதான் இருந்தது. நாகப்பட்டிணம் தாலூக்காவில் மட்டுமே விலை கிலோ ரூ. 2·00. ஆகவும் சீர்காழி தாலூக்காவில் கிலோ ரூ. 2·20 ஆகவும் உயர்ந்திருந்தது. சம்பா அறுவடை முடிந்து அடுத்த குறுவை அறுவடை வருவதற்கு முன்பாக இடைக்காலத்தில் ஜூன் முதல் செப்டம்பர்வரை நெல் அரிசி விலையில்சிறிது உயர்வு ஏற்படுவது ஒவ்வொரு ஆண்டிலும் இயல்பான ஒரு அம்சமே. வெளிச்சந்தை விலை உயர்வைக் கட்டுப்படுத்த மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி விற்பனையை மேலும் விரிவான அளவிற்கு மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் வினு எண் 285-க்கான விடையையும் படித்துவிடலாம்.

*285 Q.—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether any recommendation from East Thanjavur District Development Council for the opening of fair price shops particularly to supply rice in villages in Thanjavur district has been received; and

(b) if so, the action taken thereon?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(ஆ) சமீபத்தில் ஏற்பட்ட புயல், மழையின் காரணமாக வெளிச்சந்தையில் அரிசி வரத்து குறைந்து விலை ஏற்றம் ஏற்பட்ட காரணத்தினுல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ஏற்கனவே இயங்கி வந்த சில்லரை விற்பனை நிலையங்களின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் பொது மக்களுக்கு அக்டோபர் மாதத்தில் 1,397 டன்கள் அரிசியும், நவம்பர் மாதத்தில் 167 டன்கள் அரிசியும் விநியோகிக்கப்பட்டது. புயலினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ வழங்குவதற்காக 1000 டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்ததுசுமார் 6 மாதங்களுக்கு முன்னுல். அப்போது பரவலாக எங்கும் அரிசி கிடைக்காத நேரம். ஆனுல் இன்றையதினம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசி தாராளமாக கிடைத்தாலும் கிலோ ரூ.1·85-க்கு விற்கிறது. ஆனுல் அரசு லெவி மூலம் நெல் மூட்டை ரூ. 44·46க்கு கொள்முதல் செய்து, இப்படி அதிக விலைக்கு அரிசி விற்கிறது. அதனுல் கொள்முதல் செய்யும் விலைக்குமேல் கூடுதலாகாமல் ஏழை எளிய மக்கள் தாராளமாக வாங்கிக் கொள்ளும் அளவுக்கு அரிசி விலை குறைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருந்த நேரத்தில் தமிழ் நாட்டில் எங்குமே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் அரிசி கிடைக்காமலில்லை என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் குறிப்பிட்ட காலவரையறையில் மட்டும், மழை தொடர்ந்து பெய்த காலத்தில் அரைவை ஆலையில் சரியாக அரைக்கமுடியாத நிலைமை ஏற்பட்டதால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களில் 11 வட்டங்களில் கொஞ்சம் விலை அதிகமாக இருந்தது. என்றுலும், அரிசி தாராளமாக கிடைத்தது. அரசாங்கம் எடுத்த நடவடிக்கையின் மூலம் பொது விநியோகம் முறையில் தாராளமாக அரிசி கிடைக்கச் செய்ததன் மூலம் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்த அரசு வெற்றிபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கொள்முதல் விலை இறங்கியிருப்பதாகச் சொன்னுர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இதே விலைதான் அமுலில் இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கிராமப்புறங்களில் பெருவாரியானவர்கள் விவசாயத் தொழிலாளிகள் என்பது தெரியும். அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு கூலிகொடுக்கின்றபோ

நெல்லாகக் கொடுப்பது என்று ஒப்பந்தம் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நெல்லாக கிடைக்கும் என்பதால் இந்த பேர் பிரைஸ் ஷாப் திறப்பதற்கு அவ்வளவு சீரியசாக இல்லாமல் இருந்தார்கள். ஆனல் நெல்லாகக் கொடுக்க வேண்டுமென்று அக்ரிமென்ட் இருந்தும்கூட அது பெருவாரியான இடங்களில் அமுல்படுத்தப்படாமல் இருப்பதன் காரணமாக, அப்படி அமுல்படுத்தப் படாமல் இருக்கும்போது போலீஸ் மற்றும் ரெவினியூ அதிகாரிகள் தலையிட்டு விவசாய தொழிலாளர்களுக்கு உதவி இருக்கிறதா என்ருல் இல்லை. இன்றைக்கு அதுமாதிரி கொடுக்க முடியவில்லை. ஆகவே நல்ல அரிசி அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக பேர் பிரைஸ் ஷாப்ஸ் அமைக்கவேண்டும் என்பதற்காக டி.டி.சி. கூட்டத்தில் தீர்மானித்து ரெக்கமென்டேஷன் அனுப்பி இருக்கிருர்கள். அந்த ரெக்கமென்டேஷனை ஏற்றுக் கொள்ள அரசாங்கத்திற்கு ஏதேனும் ஆட்சேபணை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது என்னிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி அல்ல, இது தொழிலாளர் நல அமைச்சரிடமோ அல்லது விவசாய அமைச்சரிடமோ கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ரா உமாநாத் : நான் சொல்வது என்னவென்ருல் நெல்லைக் கூலியாக கொடுக்காததால் பேர் பிரைஸ் ஷாப் ஓப்பன் பண்ண வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலை. இந்த நிலையில் பேர் பிரைஸ் ஷாப் ஏன் ஓப்பன் பண்ணக்கூடாது?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிருர் என்று நான் நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே நியாய விலைக் கடைகள் குறிப்பாக அரிசி விற்பனைக்காக திறக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எப்பொழுதுமே மற்ற மாவட்டங்களிலே இருப்பதை விட தஞ்சை மாவட்டத்தில் வெளிச் சந்தையிலே கூட அரிசி குறைவாகத்தான் விற்கப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் அரிசித் தட்டுப்பாடு இருக்கிற மாவட்டங்களிலேயும், அரிசி விலை ஏறக்கூடிய வாய்ப்பும் சூழ்நிலையும் இருக்கக் கூடிய மாவட்டங்களிலேயும் வெளிச் சந்தையிலே அரிசி விற்பனையின் விலை அதிகமாக இருக்குமிடங்களிலும் பொது விற்பனை மூலமாக நாம் அரிசி விற்பனை செய்து கொண்டிருக்கிருேம். ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் இந்தச் சூழ்நிலை எந்த நேரத்திலும் எழுவது இல்லை. இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்திலேதான் விலையைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கத்துடன் அரசாங்கம் முன்வந்து 11 வட்டங்களில் பொது விநியோக முறையின் மூலம் நியாய விலைக் கடைகளின் மூலமாக தரமுள்ள அரிசி ஓரளவு நியாயமான விலையில் கிடைக்க

வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் உபரி மாவட்டம் என்ற காரணத்தினாலே அங்கு எவ்வளவு விலையேறினாலும்கூட நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட மாட்டாது என்ற நிலையை அரசாங்கம் இதுவரை வைத்துக் கொண்டிருக்கிறது. இதர மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு அரிசி குறைந்த விலையில் கொடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் தஞ்சை மாவட்டத்திலே விலை ஏறும்போது அது உபரி மாவட்டம் என்று கருதி நியாயவிலைக் கடைகள் திறப்பதை கைவிட்டுவிட்டால் விலை அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. ஆகவே, கிராமப்புறங்களில் நியாயவிலையில் அரிசி கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை அரசு அளிக்குமா ?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: அப்பேர்ப்பட்ட சூழ்நிலை தஞ்சை மாவட்டத்திலே ஏதோ ஒரு சூழ்நிலையில்தான் ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட அசாதாரணமான சூழ்நிலை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படும்போது நாம் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏழை எளிய மக்களுக்கு தாராளமாக அரிசி நியாயமான விலையில் கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கிறது என்பதைக் காட்டுதவற்காகத்தான் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை பொதுவிநியோகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அரிசி ஒரு கிலோ ரூ. 2·20-லிருந்துரூ. 2·40 வரை விற்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு அரிசி தாராளமாக கிடைக்கிறது என்றும் அரிசி பற்றுக்குறை எப்போதும் இல்லை என்றும் கூறுகிறார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கூட அரிசி அதிகமாகக் கிடைத்துதான் வந்தது. ஆகவே, விலையை உயர்த்தி விற்பனை செய்பவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இவ்வளவு கூடுதலாக விலைக்கு இப்போது அரிசி விற்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேற்றைய தினம் கூட நான் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் பகுதியில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இன்று காலையில்தான் சென்னை திரும்பி இருக்கிறேன். அங்கு பொதுமக்கள் தாராளமாக அரிசி குறைந்த விலையில் கிடைக்கிறது என்றுதான் சொன்னார்

கள். கட்டுக்கடங்காத சூழ்நிலையில் அரிசி கூடுதலான விலைக்கு விற்கப்படுவதாக பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான புகாரும் வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[முற்பகல் 9–20]

திரு. இரெ. இராசமாணிக்கம்: நான் இரண்டாவதாகக் கேட்ட கேள்வி, நெல்லை குறைந்த விலையில் வாங்கிக் கொண்டு அரிசியை அதிகமான விலைக்கு விற்பதானது நியாயம் அல்ல, குறைக்கவேண்டுமென்று கேட்டேன். ஆனால் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இதே விலைக்குத்தான் விற்றது என்று கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் நியாய விலைக் கடைகளில் ரூ. 1·60-க்குத்தான் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குறைவான விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ரூ. 1·60-க்கு அரிசி விற்பனை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் ரூ. 1·60-க்கு விற்பனை செய்ய ஏற்பாடு இருக்கிறது. மோட்டா ரக அரிசி ரூ. 1·60க்குத்தான் விற்க வேண்டும் என்பது விதிமுறை. அந்த விலைக்குத்தான் பொது விநியோகம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது, நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பொது விநியோகத் துறை மூலம் வழங்கப்படுகிற ஃபைன் வெரைட்டிக்கு, சன்ன ரக அரிசிக்கு விலை ரூ. 1·85தான். இதை விட குறைத்து விற்பதற்கு இந்த அரசால் முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதுபோல் தஞ்சை மாவட்டத்திலும் அடிக்கடி விலை ஏறக் காரணம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற கூலியை பெரும்பாலான நிலச்சுவான்தார்கள் நெல்லாகத் தராமல்—கூலி நெல்லாகத் தரப்படவேண்டும்—பணமாகத் தருவதுதான் காரணம் என்பதை அறிந்தவர்கள் நன்கு உணருவார்கள். அமைச்சர் அவர்களும் அதை அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தன்னுடைய போர்ட்போலியோ இல்லை என்று சுட்டிக் காட்டினார்கள். அமைச்சரவை என்பது கூட்டுப்பொறுப்பு என்ற முறையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர், முதல் அமைச்சர் ஆகிய எல்லோரும் கலந்து ஒப்பந்தப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு

1978 பிப்ரவரி 27]

கூலியை நெல்லாக வழங்குவதற்கு, கண்டிப்பாக கூலி நெல்லாகவே வழங்கப்படவேண்டும் என்பதற்கு ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அமைச்சரவைக்கு, அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு என்பதை நான் உணர்வேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நினைவு படுத்தியதற்கு அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன். இருந்தாலும் நான் திரு. உமாநாத் அவர்களுக்கு அளித்த பதில், சட்ட மன்றம் நடக்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கிறுர்கள். அமைச்சர்கள் அதற்கு பதில் அளிக்கிறுர்கள். அந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டால் அவர்கள் விவரமாக அறிக்கைகளை சேகரித்து கேள்விக்குப் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே, ஒரு அமைச்சர் விடையளிக்கவேண்டியதற்கு இன்னெரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல என்பதைத்தான் இந்தஅவைக்கு நான் சுட்டிக்காட்டினேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: அரசாங்கம் ஸ்டாக் வைத்திருக்கும் அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சிலஇடங்களில் கொஞ்சம் தரம் குறைந்த அரிசி ஸ்டாக் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட அரிசியை பொது விநியோகம் மூலம் மக்களுக்கு வழங்கப்படக்கூடாது என்ற உத்தரவை அரசு கொடுத்திருக்கிறது.

திருவாரூர் நவீன அரிசி ஆலை.

*286 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்ட திருவாரூரில் உள்ள நவீன அரிசி ஆலையின் மதிப்பு கணக்கிடப்பட்டு T. C. M. F. கணக்கிற்கு வந்துள்ளதா ?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.